எனது தலைமையிலான அரசின் இந்த நடவடிக்கைகள், கிராமங்கள் மேம்படவும், கிராம மக்கள் வளம் பெறவும், மகளிர் சுய உதவிக் குழுக்கள் பொருளாதார வளர்ச்சி அடையவும், கிராமப்புற இளைஞர்கள் வேலைவாய்ப்பினைப் பெறவும் வழி வகுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

முற்பகல் 11-30

3. ஊரகப் பகுதி மக்கள் பயன்பெறும் வகையிலான திட்டங்கள்—முதலமைச்சரின் அறிவிப்புக்கு நன்றி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் முனைவர் செ.கு. தமிழரசன் அவர்கள்.

முனைவர் செ.கு. தமிழரசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒவ்வொரு நாளும் சட்டமன்றம் கூடுகின்றபோது சட்டமன்றத்தில் வைக்கின்ற மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய மக்களுக்கான திட்டங்களை ஊடகங்கள் எதிரொலிக்கின்றனவோ இல்லையோ, செய்தித்தாள்கள் எதிரொலிக்கின்றனவோ இல்லையோ, சாதாரண வயல்வெளிகளில் கூடுகின்ற கூலித் தொழிலாளர்கள் இன்றைக்கு விதி 110-ன்கீழ் என்ன வரும்? (மேசையைத் தட்டும் ஒலி) நம் வாழ்க்கைக்கு ஒளி கிடைக்குமா என்று ஏங்குகின்ற, பேசுகின்ற அந்த உணர்வு இப்போது தமிழகத்தின் மூலை முடுக்குகளிலெல்லாம், கிராமங்களிலெல்லாம் எதிரொலித்துக் கொண்டிருக்கிறது. தமிழகத்தின் தலைவிதியையே மாற்றியமைக்கின்ற வகையிலே, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் விதி 110-ன் கீழ் அளிக்கின்ற அறிவிப்பு தமிழகத்தினுடைய ஒட்டுமொத்த மக்கள் விதியாக மலர்ந்திருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி)

காந்தியடிகள், 'இந்தியாவினுடைய ஜீவன் கிராமங்களிலே இருக்கிறது' என்று சொன்னார். இந்தியாவினுடைய ஜீவன் கிராமங்களிலே இருக்கிறது. அந்தக் கிராமங்களினுடைய வளர்ச்சியிருக்கிறதே, அதுதான் இந்தத் தேசத்தின் வளர்ச்சி. (மேசையைத் தட்டும் ஒலி) பாபா சாகேப் அம்பேத்கர் அவர்கள் ஒரு முறை சொன்னார். சமூக, சமத்துவம் மலர வேண்டுமானால், அதற்குக் கிராமங்களை நகர்ப்புறங்களாக ஆக்கினால் போதும் என்று. கிராமத் தன்மையே இல்லை, எல்லாம் நகர்ப்புறம்

2015 செப்டம்பர் 3] [முனைவர் செ.கு. தமிழரசன்]

ஆகிவிட்டது என்கின்ற அந்த ஒரு வளர்ச்சி இந்தியாவிலே ஏற்பட்டால், சாதியக் கட்டமைப்பு, சமூகக் கட்டமைப்பு தானாகவே மாறிவிடும் என்று பாபா சாகேப் அம்பேத்கர் சொன்னார்.

இன்றைக்குத் தமிழ்நாட்டிலே மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சித் திறத்தால், சற்றேறக்குறைய 48 சதவீதம் அளவிற்கு நகர்ப்புறங்களில் உள்ளதைப்போன்று கிராமப்புறங்களில் வளர்ச்சி ஏற்பட்டிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) ஐந்து சதவீதம் அளவிற்குத்தான் கிராமத்திற்கும், நகர்ப்புறத்திற்கும் வித்தியாசம் இருக்கிறது என்பதைப் புள்ளிவிவரங்கள் சொல்கின்றன. இப்போது அடுக்கடுக்காய் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இந்த அவையிலே விதி 110-ன்கீழ் எடுத்து வைத்திருக்கின்ற திட்டங்கள்மூலம் அந்த 48 சதவீதம் என்பது 60 சதவீதம் அளவிற்கு உயர்ந்து, கிராமப்புறங்கள் நகர்ப்புறங்களாக மலர்ந்துவிட்டன. (மேசையைத் தட்டும் ஒலி) அந்தவகையிலே, ஒரு கிராமத்தின் தேவைகளான சாலை, மின்விளக்கு வசதி, பசுமை, வேலைத்திறன் போன்றவற்றின் பற்றாக்குறையை நிவர்த்தி செய்கின்ற திட்டங்களாக அவை உள்ளன. சாலை வசதியை மேம்படுத்துகின்றவகையிலே 1,500 கோடி ரூபாயை இப்போது மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் கிராமப்புறச் சாலைகளுக்காக வாரி வழங்கியிருக்கிறார்கள்.

அதேபோல, தமிழகமே LED விளக்குகளால் வெளிச்சமயமாக இருக்கின்றது. தமிழகத்தில் இருக்கின்ற கிராமங்களெல்லாம், LED விளக்குகள் மூலமாக வெளிச்சம் பெறுகின்ற வகையிலே, இப்போது கிராமங்களில் LED விளக்குகளாக மாற்றிட நடவடிக்கை எடுத்திருக்கிறார்கள்.

அதேபோல, கிராமப்புறங்களிலே முழு நிருவாகச் சீரமைப்பை மிகப் பெரிய அளவிலே வளர்ச்சிக்குக் கொண்டு வருகின்ற வகையிலே, கிராமப்புற ஊராட்சிமன்ற அலுவலகம், அங்கிருக்கின்ற ஒன்றிய அலுவலகம் ஆகியவை புனரமைக்கப்பட வேண்டுமென்ற அந்த மலர்ச்சியை இன்றைக்குக் கொண்டு வந்திருக்கிறார்கள். நான் ஒரு குறிப்பைச் சொல்லி, என்னுடைய உணர்வைப் பதிவு செய்ய வேண்டும்.

தத்துவமேதை அரிஸ்டாட்டில் ஒருமுறை சொன்னார்; "நான் கிரேக்கனாக பிறந்திருப்பதற்குப் பெருமைப்படுகிறேன்; அதைவிட சாக்ரட்டீஸ் வாழும் காலத்திலே வாழ்கின்றேன்

[முனைவர் செ.கு. தமிழரசன்][2015 செப்டம்பர் 3

என்பதற்காகப் பெருமைப்படுகிறேன்; அதைவிட சாக்ரட்டீஸின் கருத்துக் களத்திலே ஒரு மாணவனாக இருக்கிறேன் என்பதற்காகப் பெருமைப்படுகிறேன்" என்று சொன்னார்.

அந்த அரிஸ்டாட்டில் வரிகளை மீண்டும் சொல்லி, தமிழனாக இருப்பதற்குப் பெருமைப்படுகிறேன். மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய காலத்திலே ஒரு சட்டமன்ற உறுப்பினராக இருக்கிறேன் என்பதற்காகப் பெருமைப்படுகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) தமிழகத்திலுள்ள ஏழையெளிய மக்கள் பயன்பெறும் வகையில் 1,500 சுய உதவிக் குழுக்களுக்கு உதவித் தொகை; கிராம வறுமை ஒழிப்புச் சங்கங்களுக்கு, ஒரு சங்கத்திற்கு 2 இலட்சம் ரூபாய் வீதம் உதவித் தொகை; கிராமப்புறத்தின் வறுமையை ஒழிக்கும் வகையில், வறுமை ஒழிப்பு என்பது வெறும் வார்த்தையிலே மட்டுமல்லாமல், அது செயல்பாட்டிலே வந்திருக்கிறது. அந்தவகையிலே, 600 கிராம வறுமை ஒழிப்புச் சங்கங்களுக்கு, ஒரு சங்கத்திற்கு 2 இலட்சம் ரூபாய் வீதம் நிதி ஒதுக்கீடு; எவ்வளவு பெரிய தொகை? இந்தத் தாய் உள்ளத்தை எப்படி வாழ்த்துவது?

தமிழனாகப் பிறந்ததற்குப் பெருமைப்படுகிறேன், சட்டமன்ற உறுப்பினராக ஆனதற்குப் பெருமைப்படுகிறேன். மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய காலத்திலே, இந்தத் திட்டங்களையெல்லாம் வாழ்த்துகின்ற, பாராட்டுகின்ற, ஒரு நன்றியுள்ள சட்டமன்ற உறுப்பினராக இருப்பதற்குப் பெருமைப்படுகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னாலே மாமன்னன் அசோகன் சாலை போட்டார் என்று இப்போது சொல்கிறோம். கிராமப்புறச் சாலைகளுக்காக, விளக்கு எரிவதற்காக, விளக்கு எரிவது மட்டுமல்ல; பக்கத்திலே பசுமை மரங்களை வைத்து, பசுமைச் சாலைகளை உருவாக்கி, ஒவ்வொரு தனி குடும்பத்திற்கும் 4 பசுமைக் கன்றுகளை வழங்கியதோடு, பல்வேறு திட்டங்களை வழங்கியிருக்கின்ற மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அந்த எண்ணங்களை, திட்டங்களை வாழ்த்தி, பாராட்டி, அதனை இங்கே பதிவு செய்யாவிட்டால் நாளைய வரலாறு நம்மை மன்னிக்காது என்பதால் வாழ்த்துகிறேன், வணங்குகிறேன் தாயே, பாராட்டுகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. உ. தனியரசு அவர்கள், சுருக்கமாகச் சொல்லுங்கள்.

திரு. உ. தனியரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாட்டினுடைய முதுகெலும்பாகத் திகழ்கின்ற கிராமப்புற மக்களுடைய வாழ்க்கை மேம்பட, உட்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்தித் தந்திட, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு ஏற்கெனவே பல்வேறு நலத் திட்டங்களை அறிவித்திருந்தது.

முற்பகல் 11-35

கிராமங்களில் உள்ள ஊரகச் சாலைகள் மேம்பாட்டுத் திட்டத்திற்காக, ஏற்கெனவே ரூ.800 கோடி நிதியுதவியை வழங்கியிருந்த நம்முடைய மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள், இப்போது ரூ.200 கோடியை ஊரகச் சாலைகளைப் பராமரிக்கவும், ரூ.375 கோடியில் அலுவலகக் கட்டடங்கள் உள்ளிட்ட பல்வேறு மேம்பாட்டுப் பணிகளுக்காகவும் நிதியை ஒதுக்கீடு செய்திருக்கிறார்கள். குறிப்பாக, ரூ.1,425 கோடி நிதியினை ஒதுக்கீடு செய்து, கிராமப்புறங்களில் இதுவரை வேறு எந்த ஒரு அரசும் செய்திட முடியாத, மறுமலர்ச்சிக்கான அளப்பரிய திட்டங்களை மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தந்திருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

கிராமங்களிலே இருந்த மக்கள் நகர்ப்புறங்களை நாடி வந்த நிலை இதுவரை நீடித்து வந்தது. ஆனால், இன்று நகர்ப்புறங்களிலே வாழ்கிற மக்கள் கிராமப்புறங்களுக்குச் சென்று வாழ்வதற்கான வாய்ப்பு வசதியை ஏற்படுத்திய ஒரே அரசு மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு. (மேசையைத் தட்டும் ஒலி) அதற்குச் சான்றாக, இன்று ஊராட்சிகளுக்கு எண்ணற்ற திட்டங்களைத் தந்து, குறிப்பாக 8 இலட்சம் தெரு விளக்குகளை ரூ.300 கோடி செலவிலே LED விளக்குகளாக மாற்றிட புதியதாக திட்டம் தந்துள்ளார்கள் நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள்.

அதேபோன்று, தாய் திட்டத்திலே, கிராமப்புறங்களிலே இருக்கிற சாலைகள் ஏற்கெனவே செம்மையாக இருக்கின்றன. கிராமப்புறங்களிலுள்ள தெரு விளக்குகள், சாலைகள், குடிநீர் வசதி உள்ளிட்டவை மேம்படுத்தப்பட்டிருக்கிற நிலையிலே, இந்த ஆண்டு அறிவித்திருக்கிற இந்தத் திட்டத்தின் மூலமாக மேலும் மேம்படும்.

மேலும், இப்போது Smart City என்று சொல்லக்கூடிய மாதிரி நகரங்கள் அறிவிக்கப்பட்டிருக்கிற நிலையில், இன்றைக்கு தமிழ்நாடே Smart State-ஆக இருக்கிற அளவிற்கு மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் திட்டங்களை அறிவித்திருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அந்த ஊர் Smart City; இந்த ஊர் மாதிரி நகரம் என்றெல்லாம் இல்லை. தமிழ்நாட்டில் இருக்கிற அனைத்துக் கிராமங்களுமே Smart Village ஆக மாறுகிற அளவிற்குத் திட்டங்களை மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தந்திருக்கிறார்கள்.

அதேபோன்று, பெண்களுடைய நம்பிக்கையைப் பெறும் வகையில், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் உயிருக்கு உயிராக நேசிக்கிற தமிழ்நாட்டிலுள்ள தாய்க்குலங்களினுடைய, பெண்களுடைய கண்ணீரைத் துடைக்கின்ற வகையில், (மேசையைத் தட்டும் ஒலி) உழைக்கும் மக்களாகிய பெண்களுக்கு நம்பிக்கை ஊட்டுகிறவகையில், தாய்மார்களுக்கு, கிராம சுய உதவிக் குழுக்களுக்கு ரூ.6,000 கோடி அளவிற்குக் கடன் உதவித் திட்டங்களைத் தந்திருக்கிறார்கள். ரூ.500/-, ரூ.1,000/-, ரூ.2,000/-க்கு கந்து வட்டிக்குப் பணம் வாங்கிய, வாழ்க்கைத்தரத்திலே ஒடுக்கப்பட்ட நிலையிலே இருந்த குடிசைவாழ் மக்களுடைய, உழைக்கும் மக்களுடைய கண்ணீரைத் துடைக்க, வட்டியில்லாமல் சுய உதவிக் குழுக்கள் மூலமாகவே தங்களது நிதி ஆதாரத்தைப் பெருக்கி, அவர்களது வறுமையைப் போக்கிக்கொள்ளும் வகையில், கிராம சுய உதவிக் குழுக்களுக்கு ரூ.6,000 கோடியை, இந்தியாவிலேயே தமிழக முதலமைச்சர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள்தான் அளித்தார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அதேபோன்று, கிராமங்களில் வீடுகள் கட்டுகிற இந்திரா நினைவுக் குடியிருப்புத் திட்டப் பயனாளிகள், பசுமை வீடு திட்டப் பயனாளிகள் என 1 இலட்சத்து 14 ஆயிரம் பயனாளிகளின் இல்லங்களில் வீட்டுத் தோட்டம் அமைக்க அறிவிக்கப்பட்டிருக்கிறது. ஒவ்வொரு பயனாளிக்கும் 4 மரக்கன்றுகள் வீதம் 1 இலட்சத்து 14 ஆயிரம் வீடுகளில் சுமார் 5 இலட்சம் மரக் கன்றுகளை நட்டு, நம்முடைய மேதகு முன்னாள் இந்தியக் குடியரசுத் தலைவர் டாக்டர் ஏ.பி.ஜெ. அப்துல் கலாம் அய்யா அவர்கள் கண்ட கனவை மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இந்தத் திட்டத்தின்மூலம் இன்றைக்கு நடைமுறைப்படுத்திக் காட்டியிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அப்படி

2015 செப்டம்பர் 3] [திரு. உ. தனியரசு]

பசுமையான தமிழகத்தை நிர்மாணிக்கும் வகையில், கிராமப்புறங்களினுடைய வளர்ச்சியை ஊக்குவிக்கும்வகையில், ஏழையெளிய உழைக்கும் பெண்களினுடைய வாழ்க்கைத்தரத்தை முன்னேற்றிவிடும் வகையில், இன்று பல்லாயிரம் கோடி ரூபாய் அளவிற்குத் திட்டங்களைத் தந்து, தமிழ்நாட்டினுடைய வளர்ச்சிக்கு, மறுமலர்ச்சிக்குத் தொடர்ந்து திட்டங்களைத் தந்திடும் நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய இந்த அறிவிப்பை நான் மனமாரப் பாராட்டி, வரவேற்று உரையை நிறைவு செய்கின்றேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.வி. கதிரவன் அவர்கள்.

***திரு. பி.வி. கதிரவன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இன்றையதினம் கிராமப்புறங்களின் நலனைக் கருதியும், வளர்ச்சியைக் கருதியும் 14 அறிவிப்புகளைச் செய்திருக்கிறார்கள். அந்த அடிப்படையிலே, கிராமப்புறங்களில் உட்கட்டமைப்புகளை ஏற்படுத்துகின்ற வகையிலும், ஊரகச் சாலைகளை மேம்படுத்துகின்ற வகையிலும், கிராமப்புறச் சாலைகளை மேம்படுத்துகின்ற வகையிலும், நல்ல திட்டங்களை இன்று அறிவித்திருக்கிறார்கள். அதாவது, நகரத்திற்குச் சமமாக கிராமங்கள் வளர வேண்டும் என்ற நல்ல சிந்தனையோடு இந்தத் திட்டங்களை அறிவித்திருக்கிறார்கள். சமூகப் பாதுகாப்புத் திட்டத்தின்கீழ் கிராமப்புறங்களிலே உள்ள மக்கள் அவர்களுக்கான அனைத்துச் சான்றிதழ்களையும் அந்தந்தக் கிராமங்களிலேயே விரைந்து பெறுகின்ற அளவிற்கு, அவர்களை வாழ்க்கையில் முன்னேற்றம் அடையச் செய்கின்ற அளவிற்கு இந்தத் திட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறார்கள். மேலும், கிராமங்களிலே LED விளக்குகளை ரூ.300 கோடி செலவில் மாற்றிட அறிவித்திருக்கிறார்கள். நேற்றைக்குக்கூட கிராமப்புற ஊராட்சிமன்றத்தினர் நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்களை சந்தித்துக் கேட்டார்கள். நேற்றைக்கு வந்து கோரிக்கை வைத்தார்கள். அதை இன்றையதினம் மாண்புமிகு அம்மா அவர்கள் கொடுத்திருக்கிறார்கள் என்பதை நான் பெருமையோடு சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

[திரு. பி.வி. கதிரவன்] [2015 செப்டம்பர் 3 முற்பகல் 11-40

அதேபோன்று, கிராமங்களைப் பசுமைப் பகுதிகளாக ஆக்க வேண்டும்; சுற்றுச்சூழலை மேம்படுத்திட வேண்டுமென்பதற்காக, இதுவரை கட்டப்பட்டிருக்கிற ஒரு இலட்சத்து பதினான்காயிரம் புதிய வீடுகளில், வீட்டுத் தோட்டம் அமைப்பதற்கு, நான்கு பழக் கன்றுகள் அல்லது மரக் கன்றுகள் கொடுக்க அறிவித்திருக்கிறார்கள். சாலைகளை மேம்படுத்துகின்ற வகையில், சாலைகளில் சுற்றுச்சூழலை உண்டாக்குகின்ற வகையில், இருமருங்கிலும் மரங்களை நட்டு, நல்ல சுற்றுச்சூழலை உருவாக்குகின்ற வகையில் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் திட்டங்களைக் கொடுத்திருக்கின்றார்கள்.

அதேபோன்று, மகளிர் சுய உதவிக் குழுக்கள், மாற்றுத் திறனாளிகளுக்கெல்லாம் கடன் கொடுத்து, அவர்களுடைய பொருளாதாரத்தை மேம்படுத்துகின்ற வகையில் திட்டங்கள்; இதுபோன்று கிட்டத்தட்ட 14 திட்டங்களை இன்றையதினம் மாண்புமிகு அம்மா அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். கிராமப்புறங்களினுடைய முன்னேற்றத்திற்காகவும், சாதாரண கிராம மக்கள் வாழ்வில் உயர வேண்டும் என்பதற்காகவும், அவர்கள் பாதுகாப்பாக வாழ வேண்டும் என்பதற்காகவும் இதுபோன்ற நல்ல திட்டங்களை இன்று விதி எண் 110-ன்கீழ் அறிவித்திருக்கின்ற மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களை எங்களது அகில இந்திய பார்வர்டு பிளாக் கட்சி வரவேற்று வாழ்த்துகிறது. நன்றி.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆ. நாராயணன் அவர்கள், சுருக்கமாகப் பேசி முடியுங்கள்.

திரு. ஆ. நாராயணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தினுடைய முதலமைச்சர் மாண்புமிகு அம்மா அவர்கள் விதி எண் 110-ன்மூலமாக நாட்டு மக்களுக்கு பல நல்ல திட்டங்களை அறிவித்துக் கொண்டிருக்கிறார்கள். விதி எண் 110-ன்மூலமாக, இந்த நாட்டுக்காகத் தியாகம் செய்த தியாகிகளுக்கு மணிமண்டபம்; அதைப்போல தமிழுக்காகப் பாடுபட்டவர்களுக்கு மணிமண்டபம்; மன்னர்களுக்கு மணிமண்டபம் கட்ட அறிவிப்புகளைச் செய்திருக்கிறார்கள். அந்தவகையில் கடந்த வாரத்தில் நடிகர் திலகம் சிவாஜி கணேசன் அவர்களுக்கு மணிமண்டபம்

2015 செப்டம்பர் 3] [திரு. ஆ. நாராயணன்]

அமைக்கப்படும் என்று அறிவிப்புக் கொடுத்தார்கள். காவேரி நீரைக் காப்பாற்றி, தஞ்சையில் வாழ்கின்ற மக்களுக்காக ஒரு பெரிய சாதனை படைத்தவர் மாண்புமிகு அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) கரிகால் சோழன் அதற்கான வழியைக் காட்டினார் என்பதற்காக, அவருக்கு ஒரு மணிமண்டபம் கொடுத்தார்கள். அதைப்போன்று பார்த்தீர்களென்றால், முல்லைப் பெரியாறு. (மேசையைத் தட்டும் ஒலி) கிட்டத்தட்ட பல ஆண்டுகள் போராட்டத்திற்குப் பிறகு, அதைக் கட்டிய பென்னிகுவிக்கிற்கு ஒரு மணிமண்டபம். அதாவது, தமிழ்நாட்டில் உள்ளவர்களுக்குத்தான் மணிமண்டபம் வைப்பார்கள், வெளிநாட்டுக்காரருக்கே, வெளிநாட்டிலிருந்து வந்தவருக்கே தமிழ்நாட்டில் ஒரு மணிமண்டபம், பாருங்கள். (மேசையைத் தட்டும் ஒலி) தமிழ் மக்கள், இந்திய மக்கள் என்று மட்டுமல்லாமல், வெளிநாட்டு மக்களையும் மதிக்கின்ற ஒரே தலைவி நம் மாண்புமிகு அம்மா அவர்கள்தான். (மேசையைத் தட்டும் ஒலி) நடிகர் திலகத்திற்கு மணிமண்டபம் கட்டுவதற்கு அறிவிப்பு வெளியிட்டவுடன், என்ன? நடிகர் திலகத்திற்கு அறிவித்திருக்கிறார்களே என்று எல்லோரும் ஒரு மாதிரியாகச் சொன்னார்கள். ஆனால், இரண்டு நாட்களுக்கு முன்னர் நான் ஒரு செய்தியைப் பார்த்தேன்; 'அவருடைய சிலையை அகற்ற போறாங்க, நடிகர் திலகத்தின் சிலையை அங்கிருந்து எடுக்கப் போறாங்க' என்று குறிப்பிட்டு ஒருவர் வழக்குப் போட்டிருக்கிறார். அந்த வழக்கின் காரணமாக அந்தச் சிலையை அகற்றி எங்கேயாவது ஓரமாக வைத்துவிடக்கூடாது என்பதற்காக, அவருக்கு ஒரு மணிமண்டபம்; பாருங்கள். மணிமண்டபத்திலே அந்தச் சிலை வைக்கப்படும் என்று கோர்ட்டில் சொல்லியிருக்கிறார்கள். உயர் நீதிமன்ற உத்தரவுப்படி அந்தச் சிலையை அகற்றிட வேண்டுமென்றால், மணிமண்டபத்தில் சிலையை வைக்க இருக்கிறார்கள். கோர்ட் உத்தரவு போடுகிறது, என்ன செய்ய முடியும்? அந்தச் சிலையைத் தூக்கிக்கொண்டு போய் எங்கேயாவது போட்டு விடக்கூடாது என்பதற்காக நேற்று கோர்ட்டில் சொல்லி. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ஆ. நாராயணன், விதி எண் 110-ன்கீழ் இன்றைக்கு மாண்புமிகு அம்மா அவர்கள் அறிவித்த அறிவிப்புகளை மட்டும் பாராட்டிப் பேசுங்கள்.

திரு. ஆ. நாராயணன்: சரி. இன்றையதினம் ஊராட்சிகளுக்குப் பல நல்ல திட்டங்களை அறிவித்திருக்கிறார்கள். ஊராட்சிகளில்

வாழ்கின்ற மக்கள் நல்ல சாலைகளில் போகப் போகிறார்கள். ஊராட்சிகளில் இருக்கின்ற மக்களுக்கு நல்ல நிழல் கிடைக்கும். 2,000 கிலோ மீட்டர் தூரத்திற்கு மரங்கள் நட இருக்கின்றார்கள். இப்படி பல திட்டங்களை இன்றையதினம் விதி எண் 110-ன்கீழ் அறிவிப்புகளாக வெளியிட்ட மாண்புமிகு அம்மா அவர்களுக்கு என் சார்பாகவும், எங்கள் கட்சியின் சார்பாகவும் நன்றி கூறி அமர்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். சுந்தர்ராஜன் அவர்கள்.

திரு. ஆர். சுந்தர்ராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்கத் தமிழன், சிங்கத் தமிழன் சிவாஜிக்கு மணிமண்டபம்; சுகாதார நிலையங்களில் முழு உடல் பரிசோதனை; அம்மா ஆரோக்கிய திட்டம், அம்மா மகப்பேறு சஞ்சீவி திட்டம், ரூ.100 கோடி அளவில் சென்னை, கிண்டியிலே நடுத்தர சேவைத் தொழில் சேர்ந்த, சிறு, குறு தொழிலுக்கு அடுக்குமாடி வளாகம், 16 புதிய வட்டங்கள், 5 புதிய வருவாய்க் கோட்டங்கள், சிறு, குறு, நடுத்தரத் தொழில் துறையில் வளர்ச்சி; புது தொழில் கொள்கைகளுக்கு வித்திட உங்கள் தலைமையில் தொழில் முதலீட்டாளர்கள் மாநாடு நடைபெறவுள்ளது. மின்சாரம் இல்லாதவர்களுக்கு இராமநாதபுரத்தில் ரூ.24 கோடியில் அனல் மின் திட்டம்மூலம் மின்சாரம் கொடுக்கப் போகின்றீர்கள், அம்மா.

முற்பகல் 11-45

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். சுந்தர்ராஜன், இன்றைக்கு அறிவித்த அறிவிப்புகள் குறித்து மட்டும் பேசுங்கள்.

திரு. ஆர். சுந்தர்ராஜன்: வட சென்னையில் 2,335 கோடி ரூபாயில் தொகுப்பு மின் நிலையம், ஜவுளிப் பூங்காக்களை அறிமுகப்படுத்தி முன்னிலையில் இருக்கிறீர்கள். நெசவாளர்களின் வாழ்க்கையில் ஒளியேற்றியிருக்கிறீர்கள். பசுமை வீடுகள் பயனாளிகள் உள்ளிட்ட 1,14,000 இல்லங்களில் வீட்டுத் தோட்டங்கள்; 12 மாநகராட்சிகளில் மற்றும் நகராட்சிகளில் வேலைவாய்ப்பு கொடுக்கப் போகிறீர்கள். சுய உதவிக் குழுக்களுக்கு ரூபாய் 58 கோடி அமுதசுரபி நிதி கொடுக்கப் போகிறீர்கள், கிராம வறுமை ஒழிப்புச் சங்கங்களுக்கு தலா ரூபாய் 2 இலட்சம் வீதம் வட்டியில்லாக் கடன் கொடுக்கப் போகிறீர்கள். அவர்களுடைய வாழ்க்கையில். . .

2015 செப்டம்பர் 3]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். சுந்தர்ராஜன், உரையைச் சுருக்கமாக முடியுங்கள்.*

திரு. ஆர். சுந்தர்ராஜன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஓரேயொரு பாடல் எனக்கு நினைவுக்கு வருகிறது. அந்தப் பாடலை மட்டும் பாடி முடித்துக்கொள்கிறேன்.*

'கேட்டதும் கொடுப்பவரே அம்மா, அம்மா. தமிழகத்தின் நாயகரே அம்மா, அம்மா. (மேசையைத் தட்டும் ஒலி) வெற்றியின் தீபத்தின் சக்தியே அம்மா, அம்மா. (மேசையைத் தட்டும் ஒலி) ஏழைகள் மனதை வைத்தோம் அம்மா, அம்மா. வெற்றியின் மாலைகளே அம்மா, அம்மா. தருமத்தைப் பார்த்து வியந்தோம் அம்மா, அம்மா. எங்கள் தலைவியே அம்மா, அம்மா. எங்கள் கட்சியை அறிந்தவரே அம்மா, அம்மா. (மேசையைத் தட்டும் ஒலி) ஓரிடம் நீங்கள் கொடுத்தீர்கள் அம்மா, அம்மா. அதை மீண்டும் அங்கீகரித்துவிடுங்கள் அம்மா, அம்மா. (மேசையைத் தட்டும் ஒலி) தருமத்தின் தலைவியே அம்மா, அம்மா. (மேசையைத் தட்டும் ஒலி) தமிழகத்தின் நிம்மதியே அம்மா, அம்மா. தாயுள்ளத்தில் குடிபுகுந்தோம் அம்மா, அம்மா. குளிர் நிழல் தந்தவரே அம்மா, அம்மா. கேட்டதைக் கொடுப்பவரே அம்மா, அம்மா. தமிழகத்தின் நாயகரே அம்மா, அம்மா. வெற்றியின் தீபத்தின் சக்தியே அம்மா, அம்மா. ஏழைகள் மனதை வைத்தோம் அம்மா, அம்மா. நன்றி சொல்கிறேன், அம்மா, அம்மா. வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.*

***மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழே தன் உயிராய், தமிழகமே தன் உணர்வாய், தமிழக மக்களே தன் உள்ளமாய், தமிழ்நாட்டின் முன்னேற்றமே தனது இலட்சியமாய், (மேசையைத் தட்டும் ஒலி) உண்ணாது, உறங்காது, உழைப்பைத் தவிர வேறொன்றும் அறியாது தமிழ்நாட்டைக் காத்து நிற்கும் எங்கள் காவல் தெய்வம் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஊரகப் பகுதி மக்கள் பயன்பெறும்வகையில் 14 பல்வேறு திட்டங்களுக்கு வரலாறு காணாத நிதியை வாரி வழங்கியும்,*

[திரு. எஸ்.பி. வேலுமணி] [2015 செப்டம்பர் 3

(மேசையைத் தட்டும் ஒலி) மகளிர் சுய உதவிக் குழுவிற்கு 6,000 கோடி ரூபாய் வங்கிக் கடன் வழங்கும் அறிவிப்பு வெளியிட்டமைக்கு நெஞ்சார்ந்த நன்றிகளை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்பாதங்களில் சமர்ப்பித்துக்கொள்கிறேன்.

மேலும், கோயம்புத்தூர் கோட்டத்தைப் பிரிக்க வேண்டுமென்கிற 25 ஆண்டுகால கனவை நனவாக்கியதற்கும், கோயம்புத்தூர் மாவட்டத்தில் 2,335 கோடி ரூபாய் மதிப்பீட்டில் துணை மின் நிலையம் அமைத்ததற்கும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு கோயம்புத்தூர் மாவட்ட மக்களின் சார்பில் நெஞ்சார்ந்த நன்றிகளை பொற்பாதங்களில் சமர்ப்பித்து விடைபெறுகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இன்றைக்கு ஊரக வளர்ச்சித் துறைக்கு புரட்சித் தலைவியின் எழுச்சித் திட்டங்கள். இதனால் நாள்தோறும் மக்கள் அடைகிறார்கள் மகிழ்ச்சி. அவர்கள் முகத்திலோ மலர்ச்சி. ஒரு சிலரின் மனதிலோ மருட்சி. எடுக்கிறார்கள் சில முயற்சி. செய்கிறார்கள் சிறு, சிறு கிளர்ச்சி. அவர்களுக்குக் கிடைப்பதோ அதிர்ச்சி. (மேசையைத் தட்டும் ஒலி) அதனால் வரும் தளர்ச்சி. (குறுக்கீடுகள்) ஏனெனில் மக்களின் ஆதரவு அவர்களுக்கு வறட்சி. எங்கள் புரட்சித் தலைவி அம்மா செய்வது தினமும் புரட்சி, (மேசையைத் தட்டும் ஒலி) அதனால் என்றும் அடைகிறார்கள் வெற்றியின் உச்சி. (மேசையைத் தட்டும் ஒலி) எங்கும் வளர்ச்சி, எதிலும் வளர்ச்சி. சிறப்புத் திட்டங்களைச் செயலாற்றுவதில், வளர்ச்சியிலும் வளர்ச்சி. மாண்புமிகு அம்மா அவர்களின் நான்காண்டு ஆட்சி, அனைத்துத் துறைகளிலும் வளர்ச்சியின் மாட்சி. (மேசையைத் தட்டும் ஒலி) வளர்ச்சிக்கு வாய்க்காலிட்ட வல்லமை நம் அம்மா அவர்கள். தொலைநோக்குப் பார்வையோடு தமிழகத்தை உலகத் தரத்திற்கு உயர்த்தி, விஞ்ஞானப் புரட்சிக்கு இட்டுச் செல்லும் மெய்ஞானச் சிற்பி நம் அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

ஊரக வளர்ச்சித் துறை குறித்த சிறப்பான அறிவிப்புகளை வெளியிட்ட மாண்புமிகு அம்மா அவர்களுக்கு இப்பேரவையின் சார்பிலும், என் சார்பிலும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)